உடனடி வெளியீட்டுக்காக:

## இலங்கை: தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெறும் பொதுமக்கள் துஷ்பிரயோகம்

*கட்டாய ஆட்சேர்ப்பு, நடமாட்டத்திற்கான கட்டுப்பாடுகள் வாழ்க்கையை ஆபத்திலிடுகின்றன*

(நியூயோர்க், டிசம்பர் 15, 2008) - மனித உரிமைகள் கண்காணிப்பகம் இன்று வெளியிட்ட ஒரு அறிக்கையில், இலங்கையின் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னியில் தமிழ் மக்களை கட்டாய ஆட்சேர்ப்பு, வலுக்கட்டாயமான வேலை, மக்களின் நடமாட்டங்களிற்கான கட்டுப்படுத்தல்கள் என்பவற்றின் மூலம் அவர்களது வாழக்கையை ஆபத்திலிடுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளது.

”வன்னிக்குள் அகப்பட்டு மோசமாக நடாத்தப்படும் பொதுமக்கள்: வன்னியில் மக்களை துஷ்பிரயோகிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள்” எனும் தலைப்பிலான இந்த 17 பக்க அறிக்கை, 25 வருடங்களாக சுதந்திரத் தழிழ் அரசசொன்றுக்காக போராடுகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்களை எவ்விதம் மோசமாக துஷ்பிரயோகிக்கிறது என்பதனை விபரிக்கிறது. ”

ஆசிய மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பணிப்பாளரான பிராட் அடம்ஸ், ”தமிழ் மக்களுக்காகப் போராடுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரினாலும், வன்னியில் பொதுமக்களின் அதிகரித்தளவிலான துன்பங்களுக்கு அதுவே பொறுப்பாகும்” எனக் கூறினார். “முன்னேறும் அரசாங்கப் படைகளிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருக்கும் நிலப்பரப்புகளை இழந்து வருகையில், எந்த மக்களுக்காகப் போராடுவதாகக் கூறுகிறார்களோ அந்த மக்களையே அவர்கள் கையாளும் விதம் மோசமடைந்து வருகின்றது,” என்றார் அவர்.

அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கை நடைபெறுகின்ற இவ்வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பொதுமக்கள் மீது அழுத்தங்களை அதிகரித்துள்ளது. நீண்டகாலமாக ஓர் கட்டாய அனுமதி (பாஸ்) முறை மூலம் தங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட்டு வெளியேறிச் செல்லும் பொதுமக்களை தடுத்து வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தற்பொழுது அவசர மருத்துவ தேவை தவிர்ந்த வன்னிக்கு வெளியேயான மக்கள் நடமாட்டத்தை முற்றிலுமாக தடை செய்துள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்வதை அனுமதிக்க மறுப்பதன் மூலம், அவர்களின் அத்தியாவசிய மனிதாபிமான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வழி முறைகளையும் இவ்வியக்கம் கடுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது. மார்ச் 2008 இலிருந்து, மோதல் பிரதேசங்களை விட்டு சுமார் ஆயிரம் பேர் வரையிலேயே வெளியேறிச் செல்லக் கூடியதாக இருந்தனர்.

"மக்களின் சுதந்திர நடமாட்டத்திற்கான அடிப்படை உரிமையை அனுமதிக்க மறுப்பதன் மூலம், தமிழீழ விடுதலைப் புலிகள் அபாயகரமானதோர் யுத்தப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்களை அகப்படுத்தி வைத்துள்ளது," என்று அடம்ஸ் கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், அதன் இயக்கத்திற்கான கட்டாய ஆட்சேர்ப்பில் ஓர் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கிறது. தற்போது சிறுவர் உட்பட இளைஞர்கள் மற்றும் யுவதிகளை படைகளில் சேர்த்துக் கொள்வதற்குக் கட்டாயப்படுத்தும் அவர்களின் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்படுகிறது. அண்மைக் காலத்தில் அதன் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் "குடும்பத்திற்கொருவர்", என்னும் அதன் நீண்டகால ஆட்சேர்ப்புக் கொள்கைக்கும் மேலே சென்று சிலசமயங்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குடும்ப உறுப்பினர்களையும் இயக்கத்தில் சேர்ந்து கொள்ள அது வேண்டுகிறது.

"தமிழீழ விடுதலைப் புலிகளின் இரும்புக் கரங்களில் அகப்பட்டுள்ள தமிழர்கள் கட்டாய ஆட்சேர்ப்பில் போராளிகளாக்கப்பட்டு, மோதல் முன்னரங்குகளிற்கு அண்மையாக அபாயகரமான வேலைகளில் ஈடுபடுவதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றனர்", என்று அடம்ஸ் கூறினார்.

அதிகரித்தளவிலான சர்வதேச அழுத்தங்கள் மற்றும் ஏனைய வேறு காரணிகள் சிறுவர்களின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் ஓர் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றிருக்கையில், இவ்வியக்கம் வன்னியில் சிறுவர்களை ஆட்சேர்ப்பதில் இறங்கியுள்ளமையை அண்மைக்கால அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. பாடசாலைகளில் 14-18 வயதானவர்களையும் இயக்கத்தில் சேர்ந்து கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் வேண்டியுள்ளனர்.

இவ்வியக்கம், ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் சிறுவர் பாதுகாப்பு தொண்டர் அமைப்புகளுக்கு அறிவிக்கப்படுகையில் அவர்கள் 18 வயதினை எட்டிவிடுவார்கள் என்பதினால் சிறுவர் போராளிகளாகக் கருதப்படமாட்டார்கள் என்கின்ற கணிப்பில் அநேகம் 17 வயதிலானவர்களையே இராணுவப் பயிற்சிகளுக்கு அனுப்புகின்றது.

"கடந்த வருடம் அவர்கள் 1990 ஆம் ஆண்டில் பிறந்தவர்களை இயக்கத்தில் சேர்த்தனர், இப்பொழுது 1991 இல் பிறந்தவர்கள் சேர்க்கப்படுகின்றனர்," என வன்னியிலிருந்தான ஒரு மனிதநேய தொண்டரமைப்பின் அதிகாரியொருவர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்குத் தெரிவித்தார். "அவர்கள் குடும்ப அடையாள அட்டைகளைப் பார்த்து இளவயதினரை தம்முடன் கொண்டு செல்கின்றனர். இயக்கத்தில் சேருவதற்கான வயதுத்தகுதி கொண்டவர்கள் தலைமறைவாகினால், அவர்களுக்கு தேவையான இளைஞர் அல்லது யுவதி தங்களிடம் வரும்வரை குடும்பத்தின் இளம் சிறுவர்களை அல்லது தந்தையைக் கூட்டிச் செல்கின்றனர்".

கடந்த 25 வருடங்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் அதிக எண்ணிக்கையிலான பொது மக்களைக் கொன்றுள்ளது. இலங்கையிலும் மற்றும் வெளிநாட்டிலும் அரசியல் படுகொலைகளைச் செய்துள்ளது, மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டிருக்கிறது. அது சிறுபான்மைத் தமிழ் சமூகத்திற்குள்ளேயே அதன் அரசியல் எதிரிகளை திட்டமிட்ட முறையில் இல்லாதொழித்துள்ளதுடன் பல ஊடகவியலாளர்கள் மற்றும்

போட்டி இயக்கங்களின் உறுப்பினர்களைக் கொன்றுள்ளது. அதன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் அச்சவுணர்வு மற்றும் வெளிப்படுத்துதல். ஒன்றிணைதல் மற்றும் ஒன்றுகூடுதல் என்பவற்றுக்கான அடிப்படைச் சுதந்திரத்தை மறுத்தல் என்பவற்றின் மூலமாகவே தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் அதிகாரத்தைப் பேணி வந்துள்ளது.

”வன்னிக்குள் அகப்பட்டு மோசமாக நடாத்தப்படும் பொதுமக்கள்” என்னும் அறிக்கையில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் பின்வருவனவற்றை வேண்டுகிறது:

- அதன் கட்டுப்பாட்டுப் பகுதியை விட்டு பொதுமக்கள் வெளியேறிச் செல்வதைத் தடுக்கும் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு; பாதுகாப்புக்காக மக்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்வதற்கான உரிமைகள் உட்பட மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கான உரிமையை மதிப்பதற்கு;

- தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கான அனைத்து கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு; ஆட்கடத்தல்கள் மற்றும் வலுக்கட்டாயப்படுத்தல்கள் என்பவற்றை முடிவுறுத்துவதற்கு;

- 18 வயதிற்குக் குறைந்த அனைத்துச் சிறுவர்களினதும் ஆட்சேர்ப்பினை முடிவுறுத்துவதற்கு; அதன் இராணுவ நடவடிக்கைகளில் சிறுவர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு; அதன் வசமுள்ள அனைத்துச் சிறுவர் போராளிகள் மற்றும் அதேபோன்று தற்போது 18 வயதிற்கு மேற்பட்ட ஆனால் ஆட்சேர்க்கப்படுகையில் சிறுவர்களாகவிருந்த அனைத்து நபர்களையும் விடுவிப்பதற்கு;

- ”தன்னார்வத்துடனான” என அழைக்கப்படும் வேலையுட்பட அனைத்துச் துஷ்பிரயோக முறையிலான அல்லது ஊதியமற்ற கட்டாய வேலைகொள்ளலை நிறுத்துவதற்கு; அனைத்துக் குடும்பங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வேலை செய்யக் கோருவதை நிறுத்துவதற்கு; அரண்கள் மற்றும் பதுங்கு குழிகளை நிர்மாணித்தல் போன்ற இராணுவ நடவடிக்கைகளுடன் நேரடித் தொடர்புகொண்ட வேலைகளில் பொதுமக்கள் ஈடுபடுவதை கட்டாயப்படுத்துவதை நிறுத்துவதற்கு;

- மனிதநேய தொண்டரமைப்புகள் மற்றும் ஐ.நா முகவரமைப்புகள் என்பவற்றிற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கான பாதுகாப்பானதும் தடைகளற்றதுமான அணுகுமுறைகளை வழங்குவதுடன் மனிதநேய அல்லது ஐ.நா ஊழியர்களாகப் பணியாற்றுகின்ற வன்னியில் வசிப்போர்கள் உட்பட அனைத்து மனிதநேய மற்றும் ஐ. நா பணியாளர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதற்கு.